**IN THE COURT OF I ADDITIONAL DISTRICT JUDGE, CUDDALORE.**

**O.S.No.70 of 2021**

PW1- ராமசாமி நாள் 27.07.2023

பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

1. நான் நான்காம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் 1972 ஆம் வருடம் பிறந்தேன். எனக்கு மூன்று சகோதரிகள் மற்றும் ஒரு சகோதரன் என்றால், சரியல்ல, எனக்கு நான்கு சகோதரிகள் மட்டும் தான். எனது அக்கா தனகோடிக்கும் சுந்தர்ராஜுக்கும் திருமணம் நடைபெறும்போது எனக்கு 15 வயது. எனக்கு விவரம் தெரிவதற்கு முன்பாகவே, எனது இரண்டு அண்ணன்களும் இறந்துவிட்டார்கள்.

2. நான் எனது 20 வயதிலிருந்து விவசாயம் செய்து வருவாய் ஈட்டி வருகிறேன். சுந்தர்ராஜன் வாங்கிய மூன்று கிரயங்களுக்கும் (வாதசாஆ 1 முதல் வாதசாஆ 3) நான் முழுத்தொகையும் அளித்தேனா என்றால், நான் முழுத்தொகையும் அளிக்கவில்லை, ஒரு குறிப்பிட்ட அளவு தொகை மட்டுமே வழங்கினேன். வாதசாஆ 1 ஆவணம் தொடர்புடைய கிரயம் 33 செண்ட் நிலம் தொடர்பானது. அதன் கிரயத்தொகை எனக்கு தெரியாது, நான் ரூபாய் பத்தாயிரம் அச்சமயம் கொடுத்தேன். ரூபாய் பத்தாயிரம் அளித்ததற்கு ஆவணம் எதனையும் எழுதி வாங்கவில்லை. வாதசாஆ 1 கிரய ஆவணத்தில் நான் சாட்சி கையொப்பம் செய்யவில்லை. வாதசாஆ 2 ஆவணத்தின் விஸ்தீரணம் பற்றி எனக்கு தெரியாது. அந்த கிரயம் எவ்வளவு தொகைக்கு வாங்கப்பட்டது என்பதும் எனக்கு தெரியாது. இரண்டாவது கிரயத்தின்போது நான் ஏதேனும் தொகை கொடுத்துள்ளேனா என்றால், குறிப்பாக கூற முடியாது, ஐந்தாயிரம் தொகை கொடுத்தேன் என நினைக்கிறேன். வாதசாஆ 2 ஆவணம் பதிவு செய்யப்பட்ட வருடம் எனக்கு தெரியாது என்றும், அதில் நான் சாட்சி கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான். மூன்றாவது கிரயத்தின் கிரயத்தொகை பற்றி தெரியாது. வாதசாஆ 3 ஆவணம் பதிவு செய்யப்பட்ட வருடம் எனக்கு

தெரியாது என்றும், அதில் நான் சாட்சி கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான். எல்லா கிரயத்தின்போதும் ஐந்தாயிரம், நாலாயிரம், பத்தாயிரம் என கொடுத்துள்ளேன். இருபது வருடங்களாகிவிட்டது, அப்போது எவ்வளவு தொகை அளித்தேன் என குறிப்பாக நினைவில்லை. மூன்று கிரயங்களின்போதும் நான் சுந்தர்ராஜனுக்கு அளித்த தொகைகள் தொடர்பாக எவ்வித ரசீதோ, ஆவணமோ, அவரிடமிருந்தோ, அல்லது அவரது தகப்பனாரிடமிருந்தோ, பெற்றுக்கொள்ளவில்லை என்றால் சரிதான். மூன்று கிரயங்களை பற்றியும் எனக்கு எதுவும் தெரியாது என்றும், கிரயத்தின்போது பணம் கொடுத்ததாக நான் தவறாக சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

3. சுந்தர்ராஜனின் தாயார் சுந்தர்ராஜனுக்கு ஆதரவாக தானசெட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்தார் என்றால் சரிதான். அந்த செட்டில்மெண்ட் ஆவணத்தை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். அந்த செட்டில்மெண்ட் பத்திரத்தில் எவ்வளவு சொத்துக்கள் எழுதப்பட்டுள்ளன என்ற விவரம் தெரியாது என்றால் சரிதான். சுந்தர்ராஜனின் தாயார் செட்டில்மெண்ட்எழுதி வைத்துள்ள சொத்து அந்த சமயத்தில் யாருக்கு சொந்தமானது என்பது பற்றி தெரியுமா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. என் மாமாவிற்கு சொந்தமான சொத்து என்ற அடிப்படையிலேயே நான் வழக்கு தொடர்ந்துள்ளேன். என் மாமா அந்த செட்டில்மெண்ட் சொத்தில் எவ்வளவு சொத்தினை அனுபவித்தார் என எனக்கு குறிப்பாக தெரியாது என்றால் ஆமாம். பிரதிவாதி விஸ்வகேது தானசெட்டில்மெண்ட் சொத்து, பொதுகுடும்ப சொத்து என எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ள விவரம் பற்றி தெரிந்துகொண்டேனா என்றால் எதிர்வழக்குரை பற்றி தெரிந்துகொண்டேன். சாட்சி தானாக, பிரதிவாதி விஸ்வகேது கூறுவது தவறு. தானசெட்டில்மெண்ட் சொத்தில் ஏதாவது வில்லங்கம் உள்ளதா என்று பார்த்தேனா என்றால் பார்த்தேன், வீட்டுக்கடன் வில்லங்கம் உள்ளது. நான் சொல்லும் வீட்டுகடன்

என்பது சிதம்பரம் வீட்டு வசதி கூட்டுறவு சங்கம் தொடர்பான கடன் என்றால் சரிதான். இதனை தவிர வேறு ஏதேனும் வில்லங்கம் உள்ளதா என்றால் இல்லை.

4. வழக்கு சொத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 5வது இனச்சொத்து வீடு, நான்காவது இனச்சொத்தான நிலத்தில் கட்டப்பட்டுள்ள வீடு என்றால் சரிதான். என் மாமா சுந்தரராஜு தனது தாயாரை ஏமாற்றி, தன் பெயரில் செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்படுத்திக்கொண்டார் என்றால் சரியல்ல. அந்த தாவா செட்டில்மெண்ட் சொத்தானது, பிரதிவாதி விஸ்வகேதுவும் என் மாமா சுந்தர்ராஜுவும் பாதி பாதியாக அனுபவித்து வந்த சொத்து என்றால் மறுக்கிறேன். எனது மாமா சுந்தர்ராஜ், எனது அக்கா தனகோடி, சுந்தர்ராஜின் தாயார் ஆகிய மூவரும் ஒரே வீட்டில் வசித்து வந்தார்கள் என்றால் சரிதான். எனக்கு தெரிந்தவரையில், பிரதிவாதி விஸ்வகேது வேறு வீட்டில் வசித்து வந்தார் என்றால் சரிதான். தாயார் சுந்தர்ராஜுவுடன் இருந்ததால், முழுச்சொத்தையும் சுந்தர்ராஜ் அனுபவித்து வந்தார் என்றால், அவ்வாறு சொல்ல முடியாது. தானசெட்டில்மெண்ட் சொத்திலிருந்து வந்த வருவாயைக்கொண்டுதான், வாதசாஆ 1 முதல் வாதசாஆ 3 வரையிலான சொத்துக்கள் கிரயம் பெறப்பட்டன என்று சொன்னால் சரியல்ல. சுந்தர்ராஜனின் தாயாருக்கு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைக்க எந்தவித உரிமையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

5. சுந்தர்ராஜன் இறப்பதற்கு பத்து வருடங்களுக்கு முன்பாகவே அவருக்கு கிட்னி பெயிலியர் பிரச்சினை இருந்து வந்தது என்றால் சரிதான். சுந்தர்ராஜனுக்கு, கடலூர், சிதம்பரம், பாண்டிச்சேரி மற்றும் சென்னை ஆகிய இடங்களில் சிகிச்சை வழங்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி சிகிச்சை சமயத்தில் சுந்தர்ராஜனை மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தது யார், அவருக்கு சிகிச்சை செலவுகளை யார் செய்தார்கள் என்றால், நான்தான் செய்தேன். சிதம்பரத்தில், சம்பந்தம் என்பவரின் மருத்துவமனையில்

சேர்த்தேன். எவ்வளவு ரூபாய் செலவானது என்றால் அதற்கு கணக்கு வழக்கே இல்லை. சம்பந்தம் மருத்துவமனையில் அளிக்கப்பட்ட சிகிச்சைக்கு நான் செலவு செய்த விவரம் தொடர்பாக ஏதேனும் ஆவணங்கள் உள்ளதா என்றால் இல்லை. கடலூர், பாண்டிச்சேரி, சிதம்பரம் மற்றும் சென்னை ஆகிய இடங்களில் மருத்துவ செலவு செய்தது தொடர்பான ஆவணங்கள் என்னிடம் உள்ளதா என்றால் இல்லை. சாட்சி தானாக, சாவின் விளிம்பில் இருப்பவரை தூக்கிக்கொண்டு அலையும்போது, ஆவணங்களை கேட்க முடியாது (சாட்சி அழுதுகொண்டே இந்த விவரத்தை கூறினார்). பிரதிவாதி விஸ்வகேது தான் சுந்தர்ராஜை மருத்துவமனையில் சேர்த்து, அனைத்து செலவுகளையும் செய்தார் என்றால், அதனை நான் மறுக்கிறேன்.

6. சுந்தர்ராஜ் 2016 ஆம் வருடம் இறந்தார். அதற்கு பிறகு ஐந்து வருடம் கழித்து எனது அக்கா தனகோடி இறந்துவிட்டார். எனது அக்கா தனகோடிக்கு எந்த உடல் உபாதைகளும் இல்லை. எனது சித்தப்பா ஆறுமுகத்தின் இறப்பு வீட்டிற்கு வரும்போது எனது அக்கா தனகோடி இறந்துவிட்டார் என்றால் சரிதான். ராமாபுரத்தில் இறந்த எனது அக்கா தனகோடியின் இறுதிசடங்கு, திட்டுகாட்டுர் கிராமத்தில் நடந்தது என்றால் சரிதான். நான் தான் இறந்த என் சகோதரியின் பிரேதத்தை திட்டுகாட்டுருக்கு எடுத்து சென்றேன். திட்டுகாட்டுரில் எனது சகோதரியின் உடல் தகனம் செய்யப்பட்டது என்றால், இல்லை, புதைக்கப்பட்டது. எனது சகோதரியின் இறுதிசடங்கு தொடர்பான காரியங்களை நான் தான் செய்தேன் என்றும், என் சகோதரியின் உடல் புதைக்கப்பட்டது என்றதையும் எனது வழக்குரையில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிட்டுள்ளேன்.

7. இறந்த என் சகோதரி தனகோடிக்கு இறுதிசடங்குகளையும், ஈமக்கிரியைகளையும் பிரதிவாதி தான் செய்தார் என்று சொன்னால் சரியல்ல. என் மாமா இறந்த பிறகு அவரின் சொத்துக்களை யார் பயிரிட்டு பராமரித்து வந்தார்கள் என்றால், என்

அக்காவும் நானும் பராமரித்து வந்தோம். சுந்தர்ராஜன் விட்டு சென்ற சொத்துக்களில் எத்தனை ஏக்கர் புஞ்சை, எத்தனை ஏக்கர் நஞ்சை என கூற முடியுமா என்றால், முடியாது. அந்த சொத்தில் எவ்விதமான பயிர்கள் பயிரிடப்பட்டன என்றால் சவுக்கை, பூச்செடி, தென்னை மரம் ஆகியவை பயிரிடப்பட்டன. மேற்கண்ட காலக்கட்டத்தில், வழக்கு சொத்தில் சவுக்கை, பூச்செடி, தென்னை மரம் ஆகியவை பயிரிடப்பட்டதை காண்பிக்க ஏதேனும் ஆவணங்கள் உள்ளதா என்றால் இல்லை.

8. என் சகோதரி இறந்தபிறகு திட்டுகாட்டுரில் அவரது இறுதிசடங்கு முடிந்த பிறகு, எத்தனை நாட்கள் நான் அங்கேயே இருந்தேன் என்றால் பதினைந்து நாட்கள் நான் அங்கேயே இருந்தேன். எனது சகோதரியின் உடமைகளை கருமாதிக்கு பிறகு தான் திறந்து பார்த்தோம். எனது மற்றொரு அக்கா தமிழரசி, அவரது கணவர் ராயர் (எ) கலியமூர்த்தி, ஊர் பெரியவர்கள் நால்வர் ஆகியோர் என் முன்னிலையில் என் அக்கா தனகோடியின் உடமைகளை திறந்து பார்த்தார்கள். கருமாதி செய்யப்பட்ட ஐந்து நாட்கள் கழித்து அவ்விதம் திறந்து பார்த்தோம். எனது அக்காவின் பீரோவில் என்னென்ன இருந்தன என்றால், சொத்து பத்திரங்கள், ஆதார் அட்டை, கூப்பன் கார்டு, வங்கி கணக்கு புத்தகம், வேறு சில பொருட்களும் இருந்தன. எனது அக்காவின் பீரோவை திறந்து பார்த்த விவரத்தையும், அதில் கண்டெடுக்கப்பட்ட ஆவணங்கள் பற்றியும், பிரதிவாதி விஸ்வகேதுவுக்கு தெரியப்படுத்தினோமா என்றால், தெரியப்படுத்தினேன். கிரயப்பத்திரங்கள் மற்றும் தான செட்டில்மெண்ட் பத்திரம் இருந்தது. வேறு ஒன்றும் இல்லை. நான் வழக்கை தாக்கல் செய்வதற்கு எனக்கு எவ்வித உரிமையும் இல்லையென்றும், நான் தவறாக இவ்வழக்கை தொடர்ந்துள்ளேன் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> இல்லை.

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/ her to be Correct.*
*Sd/-S.Prakash*
*I Additional District Judge*
*Cuddalore.*